PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

'சிக்னல் அட் 11.30' திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா!



சென்னை – 6 நவம்பர், 2026 'சிக்னல் அட் 11.30' திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா! மலர்விழி நடேசன் எழுத்து இயக்கத்தில், டி. இமான் இசையமைப்பில், அலர் ஸ்டுடியோஸ் சார்பில் மலர்விழி நடேசன் மற்றும் ஷிவானி சுப்ரமணி இணைந்து தயாரித்துள்ள திரைப்படம் 'சிக்னல் அட் 11:30'. இந்தத் திரைப்படத்தில் சந்தோஷ் பிரதாப், புஜிதா பொன்னாடா மற்றும் பவ்யா திரிகா ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும், இப்படத்தில் முனீஷ்காந்த், ஜெயப்பிரகாஷ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இதன் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இணைத்தயாரிப்பாளர் ஷிவானி சுப்ரமணி, " இயக்குநர்கள் பேரரசு சார், உதயகுமார் சார் இவர்களது படங்கள் பார்த்துதான் சினிமா மீது ஆர்வமே வந்தது. தனஞ்செயன் சாருடன் பேசும்பொழுது எப்பொழுதுமே ஒரு பாசிட்டிவ் வைப் இருக்கும். டி. இமான் எங்கள் படத்திற்கு பெரும் பலம். படக்குழுவினர் அனைவரும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். இயக்குநராக என் அம்மா படத்தை சிறப்பாக இயக்கியுள்ளார். நிச்சயம் உங்கள் அனைவருக்கும் படம் பிடிக்கும்". கலை இயக்குநர் முனி கிருஷ்ணன், " படம் சிறப்பாக வந்துள்ளது" ஒளிப்பதிவாளர் ராஜா, "படத்தில் முழு அர்ப்பணிப்புடன் அனைவரும் வேலை செய்திருக்கிறோம். பார்த்துவிட்டு சொல்லுங்கள்". நடிகர் ஜெயப்பிரகாஷ், " படத்தின் கதை எனக்கு முழுதாக தெரியாது. நான் சம்மந்தப்பட்ட காட்சிகள் மட்டுமே தெரியும். ஆனால், இப்பொழுது டிரெய்லர் பார்க்கும்பொழுது அற்புதமாக வந்துள்ளது. சிறந்த நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப குழுவினரை இயக்குநர் தேர்வு செய்துள்ளார். தயாரிப்பாளர் இயக்குநர் மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்". தயாரிப்பாளர் தனஞ்செயன், "சினிமா மீது உள்ள ஆர்வத்தால் வேறு துறையில் இருந்து இயக்குநர் மலர்விழி சினிமாவுக்குள் வந்திருக்கிறார். படம் பார்த்தேன். வித்தியாசமாக சுவாரசியமாக உள்ளது. சமீப காலமாக தமிழ் சினிமாவில் நல்ல படங்கள் வெளிவந்து கொண்டிருக்கிறது. நல்ல வசூலும் இருக்கிறது. அந்த வரிசையில் இந்தப் படமும் இணைய வேண்டும். தயாரிப்பாளர்கள் தரப்பில் இருந்து பல கோரிகைகைகள் தமிழக அரசிற்கு முன்வைத்திருக்கிறோம். அவை ஒவ்வொன்றாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது. படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்". இயக்குநர் ஆர்.வி. உதயகுமார், "தமிழ் சினிமாவை நம் அன்றாட வாழ்வில் இருந்து பிரிக்க முடியாது. அதனால் தான் இங்கிருந்து முதலமைச்சர்கள் உருவாகிறார்கள். வேறு துறையில் இருந்து சினிமாவிற்கு வந்து உள்ள இயக்குநர் மலர்விழி மற்றும் அவரது மகளுக்கு வாழ்த்துக்கள். இந்த படம் அட்டகாசமாக வந்திருக்கிறது. சிறிய பட்ஜெட் படங்களுக்கு திரையுலகினர் மற்றும் ரசிகர்களின் ஆதரவு தேவை. இந்த படத்தில் நடித்த மற்றும் பணிபுரிந்த அனைவரும் மிகப்பெரிய இடத்திற்கு செல்ல வேண்டும். வாழ்த்துக்கள்". இயக்குநர் பேரரசு, " பள்ளிக்கூடம் நடத்தும் ஒருவர் படம் எடுத்திருக்கிறார் என்றால் நிச்சயம் நல்ல கதையை தான் சொல்லி இருப்பார். இயக்குநர் மலர்விழி மீது அந்த நம்பிக்கை உள்ளது. இளையராஜாவுக்கு அடுத்து மனதை தொடும் இசை தருபவர் இமான் தான். சந்தோஷ் பிரதாப் மற்றும் மற்ற நடிகர்கள், தொழில்நுட்ப குழுவினர் அனைவரும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர் என்பதை டிரெய்லர் சொல்கிறது. படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்". எடிட்டர்

கலைவாணன், " சின்ன படங்கள் தான் என்னைப் போன்ற தொழில்நுட்ப கலைஞர்களை வாழ வைக்கும். இவர்களை வாழ்த்தவில்லை என்றாலும் இவர்களை பாதுகாக்க வேண்டும். இதே பதிவு செய்யவே இங்கு வந்தேன். மலர்விழி மேடம் கஷ்டப்பட்டு படம் எடுத்து இருக்கிறார். படத்தை திரையரங்குகளில் பார்த்து கொண்டாடுங்கள்". பாடலாசிரியர் மோகன்ராஜா, "இந்தப் படத்தில் உள்ள ஜோஜோ பாடலை நான் தான் எழுதினேன். மனதுக்கு நிறைவான பாடல் இது. இமானுடன் இணைந்து பல படங்கள் பணிபுரிந்து உள்ளேன். இந்த வாய்ப்புக்கு நன்றி. இயக்குநர் மலர்விழி மேடமும் நானும் சென்னையில் ஒரே ஏரியா தான். படம் நிச்சயம் வெற்றி பெறும். சந்தோஷ் இன்னும் நிறைய படங்களில் கதாநாயகனாக நடிக்க வேண்டும். வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி". 'பிளாஸ்ட்' பட இயக்குநர் சுபாஷ், " இயக்கம், தயாரிப்பு இரண்டையும் ஒருவரே செய்கிறார்கள் என்ற செய்தி கேட்போது ஆச்சரியமாக இருந்தது. இந்த உழைப்புக்காகவே படம் நிச்சயம் வெற்றி பெறும். கடினமாக உழைக்கும் சந்தோஷ் ப்ரோ இன்னும் பெரிய இடத்திற்கு செல்ல வேண்டும். இமான் இசை அருமை. நிச்சயம் உங்கள் அனைவரது ஆதரவும் இந்த படத்திற்கு வேண்டும்". நடிகர் விதார்த், "நடிகர் பிரதாப் மிகவும் மென்மையானவர், எல்லோரிடமும் அன்பாக பழகுவார். அவருக்காகவே இந்த படம் வெற்றி பெற வேண்டும். தனஞ்செயன் சார் இந்த படம் பார்த்து வந்திருக்கிறார் என்றால் படம் நிச்சயம் பிரமாதமாக வந்திருக்கிறது. என்னுடைய இசையமைப்பாளர் இமான் ஆதரவு இந்த படத்திற்கு மேலும் பலம் சேர்த்துள்ளது. படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்". நடிகை பவ்யா, " எனக்கு வாய்ப்பு கொடுத்த இயக்குநர் மலர்விழி மேமுக்கு நன்றி. கடினமாக உழைத்துள்ளார். சந்தோஷ் மற்றும் படக்குழுவினருடன் பணிபுரிந்தது மகிழ்ச்சி. இமான் சாரின் இசை அற்புதம். ஜோ ஜோ பாடல் எனக்கு பர்சனலாக கனெக்ட் ஆனது. இது வித்தியாசமான சைக்கலாஜிக்கல் த்ரில்லர் படம். எல்லோருக்கும் பிடிக்கும் என நம்புகிறேன் ". நடிகை புஜிதா, " சிக்னல் எனக்கு ரொம்பவே ஸ்பெஷல் படம். எனக்கு வாய்ப்பு கொடுத்த மலர் மேமுக்கு நன்றி. மிகவும் திறமையான, பாசிட்டிவான கோ-ஸ்டார் சந்தோஷ். பவ்யாவுடன் காம்பினேஷன் இல்லை. ஆனால், அவரை எனக்கு முன்பே தெரியும். இமான் சாரின் இசை மேஜிக். படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி". நடிகர் சந்தோஷ், "இந்த படத்தில் எனக்கு வாய்ப்பு தந்த மலர் மேமுக்கு நன்றி. நாங்கள் எல்லோரும் இந்த படத்தின் கிரீடம் என்றால் அதன் மேல் உள்ள வைரம் இசையமைப்பாளர் இமான் சார் தான். அவருடைய பாடலுக்கு நடனமாடி இருப்பது மகிழ்ச்சி. பல வருடங்கள் கழித்து சினிமாவில் ஒரு திரைப்படத்தில் பாடலுக்கு நடனம் ஆடி இருக்கிறேன் என்றால் அது சிக்னல் படத்தில் தான். சமூகத்தில் பெண்கள் பலதுறைகளில் முன்னேறி விட்டார்கள். என்றுமே அவர்களுக்கு தான் முதலிடம். எப்போதும் பல தடைகள் இருந்தாலும் அதை எல்லாம் எதிர்க்கவும் தாண்டி வரவும் கற்று விட்டோம். அதனால் மலர்விழி மேடம் பெரிய இடத்திற்கு செல்வார். படத்திற்கு உங்கள் அனைவரது ஆதரவும் நிச்சயம் தேவை". இயக்குநர் மலர்விழி நடேசன், "இது என்னுடைய இரண்டாவது படம். நான் ரசித்த படங்களின் இயக்குநர்களான உதயகுமார் சார், பேரரசு சார் என இங்கு வந்திருக்கும் பலரின் படங்களுக்கு நான் ரசிகை. அவர்கள் என் படத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக வாழ்த்த வந்திருப்பது கனவு நனவான தருணம். தனஞ்செயன் சாருக்கு படம் பிடித்திருப்பது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை கொடுத்தது. படத்திற்கு இசை மிக முக்கியம் என்பது என் எண்ணம். இந்தப் படத்திற்கு இமான் சாரின் இசை மிகப்பெரிய பலம். இந்த படம் மிகச் சிறப்பாக வந்திருப்பதற்கு மிகப்பெரிய பங்களிப்பு இமான் சாருக்கு உள்ளது. அவருக்கு நன்றி. சந்தோஷ், புஜிதா, பவ்யா மற்றும் என்னுடைய தொழில்நுட்ப குழுவினர் அனைவருக்கும் நன்றி. நிச்சயம் உங்கள் அனைவரது ஆதரவும் இந்தப் படத்திற்கு தேவை". இசையமைப்பாளர் டி. இமான், "இந்தப் படத்தின் கதை என்பதை தாண்டி பெண் இயக்குனருடன் எனது பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே இந்த படத்திற்கு இசையமைத்தேன். கல்வியாளர் இயக்குநராக சினிமாவுக்கு வந்திருப்பது ஆரோக்கியமான விஷயம். சந்தோஷ பிரதாப் நிச்சயம் பெரிய இடத்திற்கு செல்வார். ஹீரோயின்ஸ் அழகாக நடித்திருக்கிறார்கள். படத்திற்கு சப்போர்ட் செய்ய வந்துள்ள விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி. படம் பார்த்துவிட்டு சொல்லுங்கள்"